நிச்சயமின்மையின் நிழலில்…❤️💞❤️ – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/08/24/poem-10/

August 24, 2024

நீ என்னோடிருக்கப் போவதில்லை என்று தேரியும்... நான் உன்னை தக்கவைத்துக்கொள்ள போவதில்லை என்று தெரியும்... ஒரு வசந்தத்தின் எல்லா மலர்களும் ஒரு இலையுதிர்காலத்தில் உதிரும்... இருந்தும் உன் சிறிய இன்மைகளில் ஏணிப்படி பற்றிக்கொள்ள பரிதவித்துப்போகிறேன்? சற்றுநேரத்தில்தானே அணைத்துவிடும் சுடர்களையும்காற்றில் அணையாதிருக்க கைகுவித்துபோராடுவதில்லையா நீ... நஞ்சின் கோப்பையை இன்று மாலை அருந்துவோம் என்ற தெரித்தும் காலையில் ஒரு நல்ல காஃபியை நினைக்காதிருக்க முடியுமா? சூரியன் நகரும்போது நிழல்கள் நகரும் நிழல்கள் இருக்கும்போது அதுதானே வாழ்வு... ♥

— மனுஷ்ய புத்திரன்